வைத்திய செலவுக்கு

பக்கங்கள் 8 விலை சதம் 40 ★

ஈழநாடு
The EELA NADU

கலி: 19 ஐப்பசி 27 ஜுல்ஹஜ்: 29 இதழ் 272
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 12-11-77

# லண்டன் தூதரகத்தில் பீலிக்ஸ் 5,000 பவுண் பெற்றார்'

## மனைவிக்கு கண்ணாடி வாங்கினாராம்

(கொழும்பு)

முன்னாள் நிதி அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா பிரிட்டனில் உள்ள இலங்கைத் தூதுரகத்திடமிருந்து இலங்கை நாணயக் கட்டுப்பாட்டாளரின் அனுமதியின்றி 5 ஆயிரம் பவுண் ஸ்டேர்லின் பணத்தை தமது செலவுக்காகவும் தமது மனைவியினுடைய செலவுக்காகவும் பெற்றார். இத்தகவலை நிதி திட்டமிடல் அமைச்சர் திரு ரோனி டி மெல் நேற்று தேசிய அரசுப் பேரவையில் தெரிவித்தார்.

சிலாபம் எம். பி. திரு. ஹரேந்திர கொறியாவின் கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையிலேயே திரு மெல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரிட்டனில்உள்ள இலங்கை தூதுரகத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த வெளிநாட்டுச் செலா

(6-ம் பக்கம் பார்க்க)

மெய்கண்டான்
நட்சத்திரமாமா,
கலாவல்லி

எமது பிரபல வெளியீடான நட்சத்திரமாமா, கலாவல்லி தேவையானோர் தங்கள் ஆடர்களுக்கு எமது கிளையுடன் தொடர்புகொள்ளவும்.

144, ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

7648

# 30 ஆண்டு காலமாக தமிழ்ப்பகுதி அபிவிருத்திக்கு வெளிநாட்டு உதவிகள் மறுப்பு!

## சுவீடன் அமைச்சரிடம் 'தனிநாட்டு' கோரிக்கை பற்றியும் 'அமிர்' விளக்கம்

(கொழும்பு)

**கடந்த 30 ஆண்டு காலமாக இலங்கைக்கு வழங்கப்படும் வெளிநாட்டு உதவிகள் தமிழ்ப்பிரதேசங்களின் பொருளாதார கைத்தொழில் அபிவிருத்திகளுக்குப் பயன்படுத்தப்படுவதில்லை. சகலஉதவிகளும் சிங்களப்பகுதியின் அபிவிருத்திக்கே பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதேபோன்று சகலவிதத்திலும் புறக்கணிப்பட்டுவருவதினாலேயே தமிழ்மக்கள் இன்று தமக்கென ஒரு தனிநாட்டைக் கோருகின்றனர். இதைவிட நமக்கு வேறுவழி எதுவும் இல்லை.**

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று தம்மைச் சந்தித்த சுவீடன் அமைச்சர் திரு. ஒலா உல்ஸ்ரனிடம் தெரிவித்தார்.

தேசிய அரசுப் பேரவையில் உள்ள எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் சுவீடன் சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு அமைச்சர் திரு. ஒலா உல்ஸ்ரன் திரு. அமிர்தலிங்கத்தைச் சந்தித்து சுமார் அரை மணி நேரம் வரை உரையாடினார்.

திரு. உல்ஸ்ரன் திரு. அமிர்தலிங்கத்தைச் சந்தித்ததும் நீங்கள் ஏன் தனிநாடு கோருகிறீர்கள்?' என்ற கேள்வியுடனேயே தமது பேச்சுவார்த்தையை ஆரம்பித்தாராம்.

இதற்குப் பதில் அளித்த திரு. அமிர்தலிங்கம் இலங்கையை போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆகிய அந்நிய நாட்டினர் ஆட்சி செய்தபோதே இங்கு தமிழ்மக்களுக்கு ஒரு அரசும் சிங்கள மக்களுக்கு என இன்னுமொரு அரசும் இருந்ததாகவும் பிரிட்டிஷார் இலங்கையைக் கைப்பற்றியதும் நிர்வாக வசதிக்காக இரு அரசுகளையும் ஒன்றாக இணைத்து ஆட்சி நடத்தியதாகவும் கூறினார்.

25 வருடங்களாக தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் சகல வழிகளிலும் இணைந்து ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தார்கள் என்றும் தொடர்ந்தும் அவ்வாறு வாழ முடியாத நிலை ஏற்பட்டதை அடுத்து கடந்த 5 வருடங்களாகவே தமிழ் மக்கள் பிரிவினை கோருகிறார்கள் என்றும் திரு. அமிர்தலிங்கம் சுவீடன் அமைச்சரிடம் விளக்கிக் கூறினார்.

உதவி அளிக்கும்போது 'தமிழ்ப் பகுதிகளைப் புறக்கணிக்காமல் நாடு முழுவதும் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளும்படி நீங்கள் இலங்கை அரசிடம் கூறினால்

(6-ம் பக்கம் பார்க்க)

## 'கல்கண்டு' ஆசிரியர் தமிழ்வாணன் காலமானார்

சென்னை, நவ. 11

தமிழ்நாட்டின் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவரும், 'கல்கண்டு' வார இதழின் ஆசிரியருமான தமிழ்வாணன் மாரடைப்பினால் சென்னையில் நேற்றுக் காலமானார்.

இறக்கும்போது அவருக்கு வயது 51.

எழுத்துத்துறையில் இவரைப் பின்பற்றி முன்னேறிய பலர் தமிழ்நாட்டில் மாத்திரமின்றி இலங்கை, மலேஷியா போன்ற நாடுகளிலும் இருக்கிறார்கள்.

தமிழ்வாணன் 500 நூல்களுக்கு மேல் எழுதியிருக்கிறார்.

## செம்மணி கொலைவழக்கு வவனியாவில் விசாரணை?

(யாழ்ப்பாணம்)

செம்மணி துப்பாக்கிச் சூட்டுக் கொலை வழக்கு வவனியா மேல் நீதிமன்றத்தில் விசாரணைசெய்யப்படும் எனத் தெரியவருகிறது.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது.

தற்போது இவ்வழக்கை அனுராதபுரம் மேல்நீதிமன்றத்தில் விசாரணை செய்வதற்குப்பதிலாக வவனியா மேல் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படுமெனத் தெரியவருகிறது. (க-அ)

## சன்சோனிகமிஷன் யாழ்ப்பாணத்தில் விசாரணை

(கொழும்பு)

ஆகஸ்ட் கலவரம் பற்றிவிசாரணை செய்ய நியமிக்கப்பட்ட ஆணைக்குழு, யாழ்ப்பாணம் உட்பட, மற்றும் மாகாணங்களிலும், விசாரணைகள் நடாத்தும் எனத் தெரியவருகிறது.

ஆகஸ்ட்மாதம் நடைபெற்ற வன்செயல்கள்பற்றி விசாரணை செய்ய இளைப்பாறிய பிரதம நீதியரசர் திரு. எம். ஸி. சன்சோனியை ஆணையாளராகக் கொண்ட ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழு ஆகஸ்ட் 13-ம் திகதிக்கும் செப்டம்பர் 15ம் திகதிக்கும் இடைப்பட்டகாலத்தில் நாட்டில் இடம்பெற்ற வன்செயலுக்கான காரணம் பற்றி ஆராயும்.

வன்செயலின் பின்னணியில் தனிநபர் அல்லது குழுவினர் அல்லது ஏதேனும் ஸ்தாபனம்செயல்பட்டிருந்தால் அந்த விபரங்கள் ஆகியவற்றை ஆராயவும் வன்செயல்களால் பாதிக்கப்பட்டோருக்குப் புனர்வாழ்வு அளிக்கவும் மீண்டும் வன்செயல்கள் இடம்பெறுவதைத் தடுப்பதற்கான ஆலோசனைகளை வழங்கவும் இந்த ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதி அதிகாரம் வழங்கியுள்ளார்.

ஆணைக்குழு தனது அறிக்கையை மூன்றுமாதத்திற்குள் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் மாதத்தில் நாட்டில் நடைபெற்ற வன்செயல்கள் பற்றி விசாரணைசெய்ய ஜனாதிபதியின் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படும் என பிரதமர் திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன தேசியஅரசுப் பேரவையில் அறிவித்ததிற்கிணங்க இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. (அ)

## பண்டிதர் நாடு திரும்பினார்

(கொழும்பு)

சர்வதேச பாராளுமன்ற சங்க மகாநாட்டில் கலந்துகொள்ள சோவியத் சென்றிருந்த ஊர்காவற்றுறை தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் நேற்று முன்தினம் நாடு திரும்பினார். (ம-இ)

## அகதிகளுக்கு விரைவில் காணி கிடைக்கும்

[யாழ்ப்பாணம்[

யாழ்ப்பாணத்திலுள்ள முகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்கு விரைவில் காணிகளை வழங்கிப் புனர்வாழ்வளிக்க வேண்டுமென இங்கு விஜயஞ்செய்த சமூக சேவை அமைச்சின் செயலாளர் திரு. பீ. ஜி. குணசேகரா தெரிவித்தார்.

திரு. குணசேகரா அச்சுவேலி, கைதடி, பன்னாலை, நாகவிகாரை முகாம்களுக்கு நேரில் சென்று அகதிகளுடன் கலந்துரையாடி, அவர்கள் பிரச்னைகளைக் கேட்டறிந்தார்.

முகாம்களில் அகதிகள் மகிழ்ச்சியாக இருப்பதாகவும் அவர்களுக்கு எவ்வித குறையும் இல்லையென்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ். சமூகசேவை இலாகா உத்தியோகத்தர்கள் திரு. குணசேகராவுக்கு இராப் போசன விருந்தளித்தார்கள்.

]6-ம் பக்கம் பார்க்க]

## ஐ. தே. க. வெற்றி

(கொழும்பு[

தெகிவளை இடைத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியை சேர்ந்த திருமதி சுமித்திரா ரணசிங்க 18,279 வாக்குகளைப் பெற்று 10,484 அதிகப்படியான வாக்குகளால் வெற்றியீட்டி தெகிவளைத் தொகுதியின் தேசிய அரசுப் பேரவை உறுப்பினரானார்.

இவருடன் போட்டியிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த திரு. அல்பேட் பெரேராவுக்கு 7,795 வாக்குகளும், லங்கா சமசமாஜக்கட்சியைச் சேர்ந்த திரு ஆனந்த பிரேமசிங்கவிற்கு 2,753 வாக்குகளும், சுயேட்சையாகப்போட்டியிட்ட திரு. அசோகா அத்தபத்துவிற்கு 138 வாக்குகளும் கிடைத்துள்ளன.

# அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்
வழ. இல.Misc1817

இவ் வழக்கில் சங்கானை கிழக்கு மகாதேவப் பிள்ளையார் கோவில் பூசைகளுக்காக வரும்படி எடுக்க வைத்திருந்த நம்பிக்கைச் சொத்தான சங்கானை கிழக்கு முத்தேசனுதிராசன் வளவு பரப்பு நிலை. இலா. 10-த்தை கோவில் நிலன் கருதி சங்கானைச் சந்தைக் கிட்டங்கி நொச்சி ஒல்லை, கிழக்குப்புறமாகவுள்ள—50-ம் இலக்கம் கொண்ட முதலாம் அறைக் கட்டிடத்துக்காக மாற்றம் செய்ய மனுப்பண்ணப் பட்டதென்பதை வழிபடுவோருக்கு அறிவித்தல் கொடுக்கிறேன். இவ்வழக்கு 1977 மார்கழி 2-ம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படும். இதற்குமுன் எதிராக வழிபடுவோர் காரணம் காட்டும் பொருட்டு இவ்வறிவித்தல் கொடுக்கப் படுகிறது.

வே. ஐயாத்துரை
ஐ. இராசேஸ்வரி.
மனுதார், 8-11-77

எம். கே சுப்பிரமணியம்.
மனுதார் சட்டத்தரணி.

7642

---

MB/ 14482

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில்

ஈட்டு வழ:
இல: MB/14482
இராமுப்பிள்ளை துரையப்பா
மகன் மகேஸ்வரி--மணல்தறை ஒழுங்கை
கந்தர்மடம்-யாழ்ப்பாணம்.
வழக்காளி

எதிராக
1. சடையர் விரசிங்கமும் பெண்
2. தங்கமுத்துவும்-காளிகோவிலடி
கொக்குவில் மேற்கு

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தின் ஈட்டு வழ இல. MB/14482-ல் எனக்குக் கொடுக்கப்பட்ட கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1977-ம் ஆண்டு டிசம்பர் மீ 9-ம் திகதி 9-12-77 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

ரூபா 1595-ம் 31-7-74 தொடக்கம் 20-1 75 வரை ரூபா 1000/-க்கு 12 வீதவட்டியும் அதன்பின் இறுக்கும் வரை முழுத்தொகைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 394/45 சதமும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நல்லூர் கோவில் பற்று கொக்குவில் மேற்கிறை 'கலிகோக்கானும் கலிகொக்கானும், நில. இலா 1¼ செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு நாகமுத்தன் பெண் சிவக்கொழுந்துவின் ஆதனம் வடக்கு கையொழுங்கை மேற்கு ஆறுமுகநாதன் அரியகுட்டியின் ஆதனம் தெற்கு கந்தன் குப்பனின் ஆதனம் இதடங்கலும்.

க. சரவணமுத்து.
கொமிஷனர், விலைமதிப்பாளர்,

38/1, சோமசுந்தரம் அவெனியூ.
சுண்டிக்குளி, 27-10-77.

7636

---

## பிழை திருத்தம்

**இவ்வாண்டு ஐப்பசி மாதம் 10-ந் திகதி ஈழநாடு பத்திரிகையிலே வெளியிட்ட விற்பன விற்பனவு விளம்பரத்திலுள்ள பிழை பின்வருமாறு திருத்தப்படும் விபரம்**

காலஞ்சென்ற எட்வின் செல்வநாயகம் கிளுவ் கைம்பெண் ராணிமுத்து, புதுரோட்டு, காரைநகர்.
காலஞ்சென்றவர்

யாழ்ப்பாணம்: வலயம்
புறேபெற் வழக்கு இல: இ. 2554
கணபதிப்பிள்ளை கைம்பெண் தங்கரத்தினம், பயரிக்கூடல், காரைநகர்.
தத்துவகாரி

1. டாக்டர் முருகேசு தில்லைநாயகம், 29, ஜாலன் தோக்கன் கோலா றொகனு, மலேசியா, இன்னும் எட்டுபேரும்.
பிரதிவாதிகள்

யாழ்ப்பாண அலுவலகத்தின் பகிரங்க நம்பிக்கை பொறுப்பாளரினுல் தத்துவ வழக்கு இல: 2554-ல் 1977ம் ஆண்டு கார்த்திகை மாதம் 9-ந் திகதி திருத்திய அதிகாரப்படி 1977-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 15-ந் திகதி வெளியிட்ட விற்பனவு விளம்பரத்தில் கண்ட இரண்டாவது அட்டவணை ஆதனம் **தவறுதலாக மளவராய காடு நில பர. 11 என்று விபரித்திருந்தாலும் விற்பனவு செய்யப்படுவது நில. பர. 7** இது இதன் கீழ் நன்கு விபரிக்கப்பட்டிருக்கிறது. இம்மாசம் 18-ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு விற்கப்படும். முன் விளம்பரம் செய்தபடி நில. பர. 11 அல்ல விற்கப்படும் மாதனம் நொத்தாரிஸ் செ. இராசையா முன்பாக 1964-ம் ஆண்டு பங்குனி மாதம் 28-ந் திகதி 231ம் இலக்கத்தினுல் ராணிமுத்து பேரில் நன்கொடையாகப் முடித்து விற்கப்படு மாதனத்தின் குறித்தஉறுதியை என்னிடம் பார்வையிடலாம்.

1977ம் ஆண்டு ஐப்பசி மாதம் 14ந் திகதி வெளியிட்ட விற்பனவு ஆதனத்தின சரியான விலாசமும் விபரமும்.

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திரிக் தீவுப்பகுதி காரைதீவுக் கோவிற்பற்று காரைதீவு வடக்கிறை: மழவராய காடு நில. பர 11 இதில் வடக்குப்பக்கமாக நில. பர 7ஏழும் வீடுகள் தென்னைகள் பனைகள் மற்றும் பயிர்களும் எல்லை கிழக்கு ரோட்டு வடக்கு ஒழுங்கை மேற்கு துணநாயகம் பெண் முத்தாபரணத்தினுதனம் தெற்கு மிகுதி ஆதனம். இப்போ இருக்கும் எல்லைகட்குட்பட இதடங்கலும்.

தா. க. பொன்னுத்துரை J.P.
பிரசித்த ஏல விற்பனவு ஆளையாளர்,
23/1, யாழ் வீதி, யாழ்ப்பாணம்.

7643

---

கன்னுதிட்டி

# வைரக்கல்மோசடி: மூவர் றிமாண்டில்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் கன்னுதிட்டியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் வைரக்கல் மோசடி தொடர்பாகக் கைதாகி யாழ். நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட மூன்று நபர்களையும் றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி திரு கே.வி.நவரத்தினம் உத்தரவிட்டார்.

கன்னுதிட்டியைச் சேர்ந்த பொற்கொல்லரான குமாரசாமி கந்தசாமி என்பவருடன் வேலைக்கு நின்ற சாவகச்சேரி சங்கத்தானையைசேர்ந்த இராசதுரை ஆனந்தராசா என்பவர் மூழிச் சுத்தம் செய்வதற்காக தம்மிடம் கொடுக்கப்பட்ட 12 ஆயிரம்ரூபா பெறுமதியான 50 வைரக் கற்களுடன் தலைமறைவானதையடுத்து யாழ்ப்பாணப் பொலிசில் புகார்செய்யப்பட்டது.

இது குறித்துத் தீவிர விசாரணையிலீடுபட்ட யாழ்.விசேஷ குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த சார்ஜன்ட் வி. சட்டநாதபிள்ளை பல்வேறு இடங்களுக்கும் சென்று விசாரணைகள் நடத்தி, மேற்படி நபரால் 9 பேரிடம் விற்கப்பட்டிருந்த 38 கற்களைக் கைப்பற்றியதுடன் ஆனந்தராசாவையும் மற்றும், ம. கிருஷ்ணமூர்த்தி, சி. கைலாசநாதன் ஆகியோரையும் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்து யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்தார்.

நீதிபதி திரு. கே. வி. நவரத்தினம் இவர்களை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

(மா.வி அ)

---

# சைக்கிள் திருடினராம்; அது அவர் காலை வாரியது!

[மாவிட்டபுரம்]

சைக்கிள் திருட்டில் ஈடுபட்ட ஒருவர், இடைவழியில் அத்திருட்டுச் சைக்கிள் காற்றும் போனதையடுத்துச் சைக்கிள் உரிமையாளரிடம் வசமாக மாட்டிக்கொண்டாராம்.

காங்கேசன்துறை விற்பனை அபிவிருத்திநிலையத்திற்கு முன் 1,000 ரூபா பெறுமதியான தமது சைக்கிளை நிறுத்திவிட்டு எஸ். விவேகானந்தன் என்பவர் பொருட்கள் வாங்கிக்கொண்டிருக்கையில் சைக்கிள் மாயமாக மறைந்துவிட்டதாம்.

இதையடுத்து இவரும் வேறு சிலருமாக நாலாபக்கங்களிலும் சைக்கிளில் தேடிச் சென்றபோது தெல்லிப்பழையில் வைத்துக் காணமற்போன சைக்கிளுடன் சின்னத்தம்பி இராசேந்திரம் என்ற நபர் மாட்டிக்கொண்டார். சைக்கிள் காற்றுப் போனதை யடுத்து அதனை அவர் உருட்டிச் சென்றுகொண்டிருந்தாராம்.

இவர் காங்கேசன்துறைப் பொலிசில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். [அ]

---

## சந்தேக நபர்கள் சரண்!

(நெல்லியடி)

பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த கே. கணபதி என்பவரது கொலைச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் தேடப்பட்டு வந்த ஐந்து சந்தேகநபர்களும் பருத்தித்துறைபொலிஸ்நிலையத்தில் சரணடைந்தனர். கே. முருகன், ரகுநாதன், கே. வேலன், எம். மயில்வாகனம், எம். ஜெயவீரசிங்கம் என்போரே மேற்படி ஐவருமாவர். (உ)

......

## பண்டத்தரிப்பில் இலங்கை வங்கிக் கிளை

(பண்டத்தரிப்பு)

இலங்கை வங்கியின் கிளை ஒன்றுபண்டத்தரிப்பில் அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் நிறுவப்படவுள்ளது.

கொழும்பிலுள்ள இலங்கை வங்கிப் பொது முகாமையாளர், பண்டத்தரிப்பு வர்த்தகர் சங்கத்திற்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

......

## ஆசிரியரிடம் திருட்டு!

(வவுனியா)

வவுனியாவிலிருந்து முல்லைத்தீவு நோக்கிச் சென்றுகொண்டிருந்த இ. போ. ச. பஸ் ஒன்றில் ஆசிரியர்ஒருவரின்பெட்டி திருடப்பட்டுள்ளது.

இதனுள் 600 ரூபா பெறுமதி மிக்க ஆடைகளும், பயிற்சி முடிந்து வழங்கப்பட்ட சான்றிதழ்களும் இருந்தனவாம்.

எஸ். சரவணபவானந்தம் என்ற இந்த ஆசிரியர் இது பற்றி முல்லைத்தீவுப்பொலிசில் புகார் செய்துள்ளார். (உ)

---

## குறைந்த விலையில் அரிசி

(கொழும்பு)

இலங்கைக்கு இரண்டு லட்சம் தொன் அரிசியை குறைந்த விலையில் சீனுவழங்கவிருக்கிறது. சீனுவுக்கும் இலங்கைக்குமிடையிலான றப்பர் அரிசி ஒப்பந்தத்தின் கீழ் இந்த அரிசி வழங்கப்படும்.

சீனு, வியட்னும், லாவோஸ் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்த பின்னர் நாடுதிரும்பிய வர்த்தக அமைச்சர் திரு அத்துலத் முதலி மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

---

## ஒஸ்ரின் A 40 கார் விற்பனைக்கு

CN 6822 இலக்கமுடைய நல்ல நிலையிலுள்ள கார் விற்பனைக்கு உண்டு. 61, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் காரை பார்வையிடலாம். மேற்படி காரை வாங்க விரும்புவோர் சீல்பண்ணப்பட்ட விலைக் கோரிக்கையை 18 11-77-க்கு முன்னர்

**மேர்கண்டைல் கிரெடிற் லிமிட்டெட், 11|8 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்திற்கு** அனுப்பி வைக்கும்படி வேண்டப்படுகின்றார்கள்.

7639

---

## வரிவிளம்பரம்

### தேவை

சமையற்காரர், (ஆண் அல்லது பெண்) பணியாளர்கள் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன்நேரில் வரவும். 'யாழ் இன்' பருத்தித்துறை வீதி, முத்திரைச்சந்தி, நல்லூர். 7640

மரப்பொம்மைத் தொழிற்சாலையில் வேலைபழகுவதற்கும், வேலைசெய்வதற்கும் பெண்பிள்ளைகளும், பையன்களும் தேவை. நேரில் மனுச்செய்க. அரஸ்கோ இண்டஸ்றீஸ், 163, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 7626

பொம்மைத் தொழிற்சாலையில் பொறுப்பாயிருந்து வேலை பார்ப்பதற்கு கைப்பணி, சித்திரம் முதலியவைகளில் அனுபவமுள்ள முகாமையாளர் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். நேரில் மனுச் செய்க. அரஸ்கோ இண்டஸ்றீஸ், கண்டி வீதி, யாழ்ப்பாணம். 7627

### விற்பனைக்கு

மின்சாரத்தில் இயங்கும் அரிசி மில் விற்பனைக்குண்டு. 2 மோட்டர் 10 H. P. 7 1/2 H. P. அலர் 3. கிரைண்டர் 1. விபரங்களுக்கு: 36, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 7647

### சேவை

பனம்விதைகளை நட்டுப் பனையபிவிருத்திசெய்ய விரும்பும் அன்பர்களுக்குக் கிளிநொச்சித் தொகுதியின் பல்வேறிடங்களில் 15-11 77 செவ்வாய்க்கிழமை பனம் விதை விநியோகம் செய்கிறோம். தேவையானோர் முன்னரே தொடர்புகொள்ளவும். மில்க்வைற் தொழிலகம், தபாற்பெட்டி இல.77, யாழ்ப்பாணம். 7645

### வகுப்புகள்

ஓமான், டுபாய், அரேபியா, அமெரிக்கா ஆகிய வெளிநாடுகளுக்குச் செல்பவர்களுக்கு ஒருமாத காலத்திற்குள் வெல்டிங் பயிற்சி அளிக்கப்படும் தொடர்பு கொள்ளவும்: என். ஞானசேகரம், இல. 148/A, ஸ்ரான்லிரோட், யாழ்ப்பாணம். 7630

---

## அறிவித்தல்

மாதகல்மயில்வாகனப் புலவர் சனசமூக நிலைய கட்டிட நிதிக்காக 10-11-77-ல் குலுக்க வேண்டிய அதிர்ஷ்டலாபச் சீட்டை அடிக் கட்டைகள் சேராத காரணத்தாலும், வசதியீனம் காரணமாகவும் 14-1-78 ம் திகதி குலுக்கப்படும்என அறிவிக்கின்றோம்.

க. தர்மகுமார்
[செயலாளர்]
த. சண்முகநாதன்
(தலைவர்) 7638

---

## அகதிகள் முகாமை பார்வையிட்டனர்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலியிலுள்ள அகதிகள் முகாமுக்கு சமூகசேவைகள் அமைச்சு செயலாளர் திரு. ரி. சி. குணசேகரா நேரில் சென்று பார்வையிட்டார். திரு. ரி. சி. குணசேகராவுடன் யாழ் சமூகசேவை இலாகா அதிபர் திரு. கே. கெங்காதரனும் சென்றிருந்தார்.

அகதிகளை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகள் பற்றி அவர் நேரில் கேட்டறிந்ததுடன் அகதிமுகாம் பொறுப்பாளருடன் கலந்தாலோசித்தார்.

# சதாத்தின் யோசனைக்கு இஸ்ரேல் பிரதமர் வரவேற்பு

லண்டன், நவ. 11
மத்திய கிழக்கு விவகாரம் குறித்து இறுதித் தீர்வுகாணும் வகையில் எகிப்திய ஜனாதிபதி அன்வர் சாதாத் இஸ்ரேல் விஜயம் மேற்கொள்வதை இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகின் வரவேற்றுள்ளார். எனினும் இஸ்ரேலியத் துருப்புகள் வாபஸ்பெறவேண்டும், பலஸ்தீனிய இராஜ்யம் ஒன்று உருவாகவேண்டும் என்ற கோரிக்கையை திரு. பெகின் நிராகரித்துள்ளார்.

## ரொடீஷியப்பிரச்னை: ரம்பாலா அவநம்பிக்கை

லண்டன், நவ. 11
ரொடீஷியப் பிரச்னை தொடர்பான பிரிட்டன்-அமெரிக்க கூட்டு ஆலோசனைத் திட்டம் வெற்றி பெறும் சாத்தியக்கூறுகள் குறைவாகவே உள்ளன என்று பொது நல அமைப்பு நாடுகளின் பிரதம செயலாளர் திரு. ரம்பால் கருத்து வெளியிட்டுள்ளார்.

ம. கிழக்குப் பிரச்னை குறித்து அவர் செய்திநிருபர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு கூறினார்.

ம. கிழக்குப் பிரச்னையில் பல சிக்கல்கள் அடங்கியுள்ளன என்றும் பேச்சுவார்த்தைகள் மூலம் இப்பிரச்னைக்குத்தீர்வு கிடைக்கும் என்ற நம்புவதற்கில்லையென்றும் அவர் தெரிவித்தார். (உ)

# மத்திய கிழக்கில் மீண்டும் யுத்த அபாயம்

## கார்ட்டர் எச்சரிக்கை

வாஷிங்டன், நவ. 11
இஸ்ரேல்-லெபனன் எல்லைகளில் சமீபத்தில் இடம்பெற்ற வன்செயல்கள் குறித்து அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் வருத்தம் தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் நிருபர்கள் மத்தியில் அவர் பேசுகையிலேயே இவ்வருத்தத்தைத் தெரிவித்தார்.

இம்மோதல்களில் ம. கிழக்கில் மீண்டும் ஒரு யுத்தம் மூளக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியுள்ளது என்றும் திரு. கார்ட்டர் கூறினார். (உ)

......

## பரீட்சைநிலையங்களில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு

(கொழும்பு)
டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஜி.சி.ஈ. சாதாரணபரீட்சை நிலையங்களில் பலத்த பொலிஸ் பாதுகாப்பிற்கு கல்வி அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது.

இதற்கென நாட்டில் 308 இணைப்பு நிலையங்கள் அமைக்கப்படவிருக்கின்றன. இப்பரீட்சைக்கான வினாத்தாள்கள் வழக்கம் போல் தபாலில் அனுப்பப்பட மாட்டாது. வேறு பாதுகாப்பான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்பரீட்சைக்கு 3 லட்சம் மாணவர்கள் தோற்றுவார்கள் டிசம்பர் 14-ம் தேதி ஆரம்பமாகும் இப்பரீட்சை டிசம்பர் 24-ம் தேதி முடிவடையும். (ம)

# இலங்கை உட்பட 3 நாடுகள் கண்டனம்

நியூயோர்க், நவ. 11
கைப்பற்றப்பட்ட அரபு பிரதேசங்களில் உள்ள லட்சக்கணக்கான மக்களின் மனித உரிமைகளை இஸ்ரேல் மறுத்து வருகிறது என்று ஐக்கிய நாடுகள் சார்பில் இலங்கை உட்பட மூன்று நாடுகள் தெரிவித்துள்ளன.

ஐ. நா. சார்பில் ஆய்வு நடத்திய இலங்கை, செனகல், யூகோஸ்லாவியா ஆகிய நாடுகள் இது தொடர்பான அறிக்கையொன்றை விடுத்துள்ளன.

இஸ்ரேலிய சிறைகளில் சித்திரவதை, வேண்டுமென்றே நெருக்கடியை ஏற்படுத்தல் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது அனுவசிய வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுதல் ஆகிய கொடுமைகள் அங்கு நடைபெறுகின்றன என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

(அரியாலை)
கல்விப் பொதுத்தராதரப் பத்திரஉயர்தரப்பரீட்சைக்கு யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியிலிருந்து தோற்றிய 94 மாணவர்களில் 50 மாணவர்கள் 4 பாடங்களிலும் 25 மாணவர்கள் 3 பாடங்களிலும் சித்தி பெற்றுள்ளனர்.

ஆசிரியர் நியமனம்:

# ‘இவர்களுக்கு முன்னுரிமை வழங்குங்கள்’

(யாழ்ப்பாணம்)
ஏற்கனவே பாலர் பாடசாலைகளில் கடமையாற்றிய சகல ஆசிரியைகளுக்கும் தராதரப் பத்திரமற்ற ஆசிரியர் நியமனத்தில் முன்னுரிமை அளிக்குமாறு இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கச் செயலாளர் திரு. இ. சுப்பிரமணியம் கல்வி மந்திரியைக் கோரியுள்ளார்.

அவர் கல்வி மந்திரி திரு. நிஸங்கா விஜயரத்னவுக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில் பாடசாலையில் மாணவர் அனுமதியை ஐந்து வயதாக்கியதற்கு நன்றி தெரிவித்துள்ளார். இம்மகஜரின் பிரதிகள் தேசிய அரசப் பேரவை உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (உ)

# குடும்பப் பெண்ணை கொன்று பொருட்கள் கொள்ளை

(கொழும்பு)
கணவன் வீட்டில் இல்லாத சமயம் திருட்டு நடத்திய கொள்ளையர்கள் வீட்டுக்காரரின் மனைவியை கொலைசெய்து விட்டு மறைந்துவிட்டனராம்.

இத்திகில்சம்பவம் மகாஓயா பொலிஸ்பகுதியில் நிகழ்ந்துள்ளது.

சம்பவதினம் இரவு வீட்டுக்காரர் 20 மைல் தொலைவில் உள்ள வயலுக்குச்சென்றிருந்த சமயம் வீட்டின் ஓடுகளைப் பிரித்து வீட்டினுள் புகுந்த கொள்ளையர் வீட்டுக்காரரின் மனைவியான மெனிக்கா என்பவரைக் கொன்றுவிட்டு வீட்டில் இருந்த 1680 ரூபா பெறுமதிமிக்க பொருட்களையும் திருடிச் சென்றனராம். (உ)

## சிறிமா கவலை!

(நெல்லியடி)
வேலையிழந்த உடுப்பிட்டி ப.நோ. கூ.ச பாவனையாளர் பிரதிநிதிகளுக்கு முன்னை நாள் பிரதமரும் அத்தனகலை தேசிய அரசுப் பேரவை உறுப்பினருமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கவலை தெரிவித்து கடிதம் எழுதியுள்ளார்

பிரஸ்தாப கடிதத்தை பாவனையாளர் பிரதிநிதிகளின் சார்பில் ஏ. சுவேந்திரராஜாவிற்கு அவர் அனுப்பிவைத்துள்ளார்.

வேலையிழந்த ஊழியர்களின் நிலையைத் தாம் அறிந்திருப்பதாகவும், தமது கட்சி இதுபற்றி நடவடிக்கைகள் எடுக்க இருப்பதாகவும் அக்கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மொத்தம் 24 பாவனையாளர் பிரதிநிதிகளின் சார்பில் திரு. சுவேந்திரராஜா முன்னைநாள் பிரதமருக்கு அனுப்பிய மகஜர் சம்பந்தமாகவே இக் கவலை தெரிவிக்கும் கடிதத்தை அவர் அனுப்பி வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## யாழ். நகரில் ஜெர்மன் திரைப்படவிழா

(யாழ்ப்பாணம்)
ஜெர்மன் திரைப்படவிழா இம்மாதம் 18ந் திகதி யாழ்ப்பாணம் றீகல் திரையரங்கில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இவ்விழா ஒருவாரகாலம் நடைபெறும். விழாவில் இலங்கையின் ஜெர்மன் தூதுவர் கலந்துகொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. (கெ-அ)

## கோரிக்கை

(வவனியா)
வவனியாவில் நிலவும் டீசல் தட்டுப்பாட்டை நீக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. டுஹாரத்தை தந்திமூலம் கேட்டுள்ளார்.

டீசல் தட்டுப்பாடு விவசாயிகளைப் பெரிதும் பாதிக்குமென்பதையும் எம். பி. சுட்டிக் காட்டியுள்ளார். (உ)

## பஸ் விபத்தில் காயமடைந்தார்

(கொடிகாமம்)
கைதடி நுணாவிலில் வைரவ கோவிலுக்கருகில் நடந்த பஸ் விபத்தில், சைக்கிளில் சென்றவர் காயமடைந்தார். இவ் விபத்துக்கடந்தசெவ்வாயன்று நிகழ்ந்தது.

காயமடைந்த கைதடியைச் சேர்ந்த முருகன் சடையன் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். சாவகச்சேரிப் பொலிசார் இச்சம்பவம் தொடர்பாக விசாரணை செய்தனர். (க-அ)

......

## கத்தி வெட்டு! இருவர் ஆஸ்பத்திரியில்

(நெல்லியடி)
குடும்பத்தகராறு காரணமாக 64 வயது முதியவர் ஒருவர் மீதுகத்திபாய்ச்சப்பட்டதாம்.

கரவெட்டி மேற்கில் நடைபெற்ற இச் சம்பவத்தில் ஆழ்வான் வேலன் என்பவர் காயமடைந்து மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான ரி. பாலச்சந்திரன் என்பவரும் ஆஸ்பத்திரியில்காயத்துடன் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவரை வி.குணம் என்பவர் வெட்டினாராம். பருத்தித்துறைப் பொலிசார் விசாரணை நடத்திவருகின்றனர். (உ)

# ‘துணிவே துணை’ என வாழ்ந்தவர் தமிழ்வாணன்!

### வி. ஆர். ஸ்ரீ நடராஜா

தமிழ்நாட்டின் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவரும், பல்லாயிரக்கணக்கான அபிமான வாசகர்களை பெற்றிருந்த வருமான ‘கல்கண்டு’ வார இதழ் ஆசிரியர் தமிழ்வாணன்நேற்று மாரடைப்பால் சென்னையில் காலமானார்.

இந்த செய்தி தமிழ்நாடு மட்டுமல்லாது கடல் கடந்த பல நாடுகளில் பரந்து வாழும் தமிழர் தம் நெஞ்சங்களில் எல்லாம் பேரிடியாக விழுந்தது.

பலதுறைகள் சம்பந்தமாக இவர் எழுதிய நூல்கள் வாசகர்களுக்குப் பெரிதும் பயன்பட்டன.

இயற்கை வைத்தியம், அறிவுத்துறை, சம்பந்தமாக அவர் எழுதிய நூல்கள் இதில் குறிப்பிடத்தக்கன.

‘‘துணிவே துணை’’ என்பதைத் தம்தாரக மந்திரமாகக் கொண்டு வாழ்ந்தவர் திரு தமிழ்வாணன்.

தமது ‘கல்கண்டு’ இதழின் அட்டைப்பக்கத்தில் ‘துணிவே துணை’ என்ற தம்தாரக மந்திரத்தைக் குறிப்பிட அவர் என்றும் மறந்தவரல்லர்.

துப்பறியும் நாவல்கள் எழுதுவதிலும் திரு. தமிழ்வாணன் தனிச்சிறப்புப்பெற்றுத் திகழ்ந்தார்.

அவர் எழுதிய துப்பறியும் கதைகளில் ‘சங்கர்லால்’ என்ற துப்பறியும் நிபுணர் வாசகர் மத்தியில் நிரந்தரமான ஒரு இடத்தை பிடித்துக் கொண்டார்.

‘‘துன்பமே போ’’ நூறாண்டுகள் வாழ்வதுஎப்படி? பிறரைக் கவர்வது எப்படி? அழகாக இருப்பது எப்படி? முதலான அவரது அறிவு நூல்கள் வாசகர் மத்தியில் பெரும் வரவேற்புப்பெற்றன.

கேள்வி-பதில் பகுதிக்காகவே ‘கல்கண்டு’ இதழை வாரந்தோறும்வாசித்து மகிழ்ந்தோர் எண்ணற்றோர். தமிழ்வாணனை ‘தலைக்கனம்’ பிடித்தவர் என்று கூறுவோரும் இல்லாமலில்லை

கேள்வி-பதில் பகுதியில் தமக்கே உரித்தான விதத்தில் நறுக்குத் தெறித்தாற்போல் பதிலளிப்பார் திரு. தமிழ்வாணன்.

‘கட்டப்பொம்மன், கொள்ளைக்காரன், புலித்தேவனே சுத்தவீரன்’ என்று தொடர் ஆராய்ச்சிக்கட்டுரைகள் எழுதி தமிழ் மக்கள் மத்தியில்பெரும் பரபரப்பை ஏற்படுத்தியவர் திரு. தமிழ்வாணன்.

தமது துப்பறியும் நாவல்களில் பெரும்அளவில் தனித் தமிழ்ப்பெயர்களைக் கையாள்வதில் நாட்டம் கொண்டவராக திரு. தமிழ்வாணன் இருந்தார்.

தற்போது தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருக்கும் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் திரைப்படத்துறையில் மிகப் பிரபல்யம் பெற்றுத் திகழ்ந்தவேளை அவருக்கு ‘‘மக்கள் திலகம்’’ என்ற மிகப் பொருத்தமான பட்டத்தைத் தமது ‘கல்கண்டு’ இதழ் மூலம் அளித்து கௌரவித்தவர் திரு. தமிழ்வாணன்.

ஹொலிவூட்டின் மிகச் சிறந்த நடிகரான மார்லன் பிராண்டோவுக்கு நடிப்புத் துறையில் சற்றும் சளைத்தவரல்லர் நடிகர் திலகம் திரு. சிவாஜி கணேசன் என்ற உண்மையையும் உரைத்தவர் திரு. தமிழ்வாணன்.

கர்மவீரர் காமராஜர் திரு முருக கிருபானந்தவாரியார் ஆகியோர்மீது பெருமதிப்புக் கொண்டிருந்தவர் அவர்;

திரு. தமிழ்வாணனின் இயற்பெயர் இராமநாதன் என்ற போதிலும் தமிழ்வாணன் என்ற புனைபெயரே அவருக்கு வாசகர் மத்தியில் பிரபல்யத்தை ஏற்படுத்தியது.

‘குமுதம் பிரிண்டர்வில்’ வெளியிடப்பெற்ற ‘கல்கண்டு’ இதழின் ஆசிரியராக 30 வருடங்கள் தொடர்ந்து பதவி வகித்தவர் அவர்.

திரு. தமிழ்வாணனுக்கு தமிழ் நாட்டில்மட்டுமல்லாது இலங்கை, மலேஷியா முதலான கடல் கடந்த நாடுகளிலும் அபிமான வாசகர்கள் இலட்சக்கணக்கில் உள்ளனர்.

‘கல்கண்டு’ இதழைக் காப்பியடித்து கேள்வி பதில் பகுதி மூலம் தமது இதழ்களுக்கு மகத்துவம் தேட முயன்று தோல்வியடைந்த சஞ்சிகை வெளியீட்டாளர்களும் பலர் இருக்கத்தான் செய்கிறார்கள் என்பது உண்மை என்பதை குறிப்பிடுவது இக்கட்டத்தில் தவறாக முடியாது.

திரு. தமிழ்வாணன் மீது தமிழ் வாசகர்கள் மட்டுமல்ல பேரறிஞர் அண்ணாதுரை, கர்மவீரர் காமராஜர் தமிழ்நாடு முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். தி.மு.க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி முதலான பெருந்தலைவர்கள் கூட தனிமதிப்பு வைத்திருந்தனர்.

துணிச்சலான அரசியல் விமர்சனங்கள் எழுதி அரசியல் தலைவர்களுக்குத் தலையிடியாய

(4-ம் பக்கம் பார்க்க)

# வேற்றுமையில்ஒற்றுமைக்கு ரஷ்யா எடுத்துக்காட்டு'

## — வி. பி.

[சுழிபுரம்]

''உலக நாடுகள் பல விடுதலைபெற்றுவதற்கு அக்டோபர் புரட்சியே மூலகாரணமாகும். உலகில் மிகப் பெரிய நாடான சோவியத் நாட்டில் ஏற்பட்ட புரட்சி, உலகில் பல மாற்றங்களையும், சிந்தனைகளையும் தந்துள்ளது. அங்கு வாழும் எல்லா இன மக்களும் இன்பமாக வாழும் வகையை அமைத்துள்ளனர். ஏற்றத் தாழ்வு இல்லை. அடிமைத் தனம் அகற்றப்பட்டுள்ளது. இன்று இலங்கையில் உருவாக்கப்பட்ட சட்டங்கள் பல, சோவியத் நாட்டில் விளைந்தவையேயாகும், இன்று இலங்கையில் ஏதோவெல்லாம் பேசுகின்றார்கள். முதலில், 'நாம் இலங்கையர்' என்ற கருத்தை வெளியிட்டவர் ஒரு தமிழ் மகனை சேர் பொன். அருணசலமாவார். நீதி, நேர்மை, நியாயம் ஆகிய கோட்பாட்டுக்குள் நின்று சோவியத் மக்கள் வாழ்ந்துவருகின்றனர். எமக்குள் வேற்றுமைகள் பல உண்டு. வேற்றுமையில் ஒற்றுமை காண முயல்பவர்கள் முதலில் சோவியத் நாட்டை, அங்கு நடைபெறும் ஆட்சியைக் கவனிக்கவேண்டும். அங்குள்ள நிலைமை இங்கு ஏற்பட்டால் இலங்கை ஒரு சொர்க்க நாடாக விளங்கும்.''

இவ்வாறு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகரான திரு.வி.பொன்னம்பலம் பண்ணாகம் அண்ணா கலைமன்றத்தினர் நடத்திய கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

மன்றத் தலைவர் பண்டிதர் ப. இராசகுரு கருத்தரங்கிற்கு தலைமை வகித்தார்.

### தர்மலிங்கம் எம். பி. பேச்சு

மானிப்பாய்த் தொகுதித் தேசியப் பேரவை உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில் ''நூற்றி இருபது இனங்கள் தங்கள்சுய நிர்ணய உரிமையுடன் சோவியத் நாட்டில் சிறப்புடன் வாழும் ஒரு புதிய யுகத்தை நாம் அங்கு காண்கின்றோம். உலக நாடுகளில் அரசியல் புரட்சி ஏற்படுவதற்கு அக்டோபர் புரட்சி தான் மூலகாரணமாகும். கொடுங்கோன்மை, சுரண்டல் யாவும் ஒழிக்கப்பட்டு, அவரவர் உரிமைகள் மதிக்கப்பட்டு அவை அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதனால்தான் இன்று சோவியத்நாடு பொருளாதாரத்தில் மிகவும் முதன்மையாக விளங்குகிறது'' என்ருர். [உ]

# 'குடிபெயர்ந்து வந்தோரை வாழவைப்பது கடமை'

## — யாழ். எம். பி.

(அரியாலை)

''நாட்டில் ஏற்பட்ட வன்செயல்களால் பாதிக்கப்பட்ட நிலையில் தென்னிலங்கையிலிருந்து நமது பகுதியை நோக்கி குடிபெயர்ந்து வந்த எமது உடன்பிறப்புகளுக்கு நல்வாழ்வளிக்கவேண்டிய பொறுப்புக்கள் எமக்கு உண்டு. பாதிக்கப்பட்ட எம் உடன்பிறப்புகளின் நலவுரிமைக்காகநாம்உழைத்து வருவதால் அரசியல் விடயங்களில் தீவிரகவனம் செலுத்த முடியவில்லை. இலங்கையின் அரசியல் நிலையும் கடந்த சில மாதங்களாக மிகவும் சிக்கல் நிறைந்ததாகவே அமைந்துள்ளது. தமிழர்கள் பூரண விடுதலை பெற்று தமக்குரிய சகல உரிமைகளையும் பெற்றுவாழும் வரை எமது போராட்டங்கள் ஓயமாட்டாது. இதற்கானதிட்டங்களைத் தீட்டி நாம் செயல்படவேண்டும்''.

இவ்வாறு யாழ்ப்பாணத் தொகுதித்தேசியஅரசுபேரவை உறுப்பினர் திரு. வெ.யோகேஸ்வரன், யாழ்ப்பாணம் கொட்டடி சனசமூகநிலைய மண்டபத்தில் நடைபெற்ற தேநீர் விருந்துபசார வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

நிலையத்தலைவர் திரு. இ.தவராசா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. வெ. யோகேஸ்வரன் தொடர்ந்து பேசுகையில், ''யாழ்ப்பாணத் தொகுதியில் திட்டமிட்டுக்குடியேற்றங்கள் செய்யப்படாமையால் அக் குடியேற்றங்களில் குடியேற்றப்பட்ட மக்கள் வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்டுள்ளனர். மின்சாரவசதியும், குடிநீர்வசதியுமின்றியும் வாழ்கின்றனர். எனது எம். பி. பதவிக்காலத்தில் இப்பிரச்னைகளுக்குத் தீர்வுகாண நான் பூரண நடவடிக்கைகள் மேற்கொள்வேன்.

இத்தொகுதியின் அபிவிருத்திக்காக உழைக்கும் அதே நேரத்தில் இயக்கத்தைக் கட்டி வளர்த்துப் பலப்படுத்துவதிலும் போதியகவனஞ்செலுத்தி வரவும் முடிவு செய்துள்ளேன் என்றும் கூறினுர்.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் திரு. யோகேஸ்வரன் எம். பி. கண்ணுபுரம், வில்லூண்டிப்பகுதியில் வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்டநிலையில் வாழும் மக்களின் அவல நிலைகளை நேரில் சென்று பார்வையிட்டார். (உ)

கருடாவில் கொலைமுயற்சி வழக்கு:

# காயமடைந்தவருக்கு 2,500 ரூபா நஷ்டஈடு!

(யாழ்ப்பாணம்)

கெருடாவில் கொலை முயற்சி வழக்கில், எதிரி இரு வருட நன்னடத்தைப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டு, காயமடைந்தவருக்கு எதிரி 2500 ரூபா நஷ்டஈடு வழங்க வேண்டுமென நீதிபதி தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனப். எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் 75 ம் ஆண்டு பெப்ரவரி 13 ம் திகதி சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த கெருடாவிலில் இரத்தினம் கமலநாதனைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ய முயற்சித்ததாகத் தில்லையம்பலம் திருச்செல்வம் என்பவர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினம், சட்டத்தரணி எஸ். பி. மயில்வாகனத்தின் அனுசரணையுடன் ஆஜரானுர். அரசதரப்பில் சட்டத்தரணி பி. சிவலோகநாதன் வழக்கை நடத்தினுர்.

விசாரணை நடுவில் எதிரி கடும் காயம் விளைவித்த குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து தீர்ப்பு வழங்கப்பட்டது. (க-அ)

# அகதிகள் இடமாற்றம் நிறுத்தம்

(நெல்லியடி)

வதிரி ஸ்ரீ பரமானந்தா ஆசிரமத்தில் தங்கியுள்ள அகதிகளை அச்சுவேலிக் கைத்தொழிற்பேட்டையில் உள்ள அகதிகள் முகாமுக்கு மாற்றுவதற்கு எடுத்த முயற்சிகள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

கோப்பாய் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு சி. கதிரவேலுப்பிள்ளை எடுத்த உடன் முயற்சி காரணமாகவே இம்மாற்றத் திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

சமூகசேவைப் பகுதி அதிகாரி திரு. கெங்காதரனை திரு கதிரவேலுப்பிள்ளை நேரடியாகச் சந்தித்து, இம்மாற்றத்தினைத் தடுத்து நிறுத்தும்படி கோரினுர். அதிகாரியும் உடனடியாக இதற்கான அறிவித்தலை வழங்கினுர்.

மேற்படி ஆசிரமத்திலுள்ள 84 அகதிகளும் இந்த அகதி முகாமை விட்டு வெளியேறி வேறு முகாமுக்குச் செல்ல விரும்பவில்லை. தொடர்ந்தும் வதிரி ஸ்ரீ பரமானந்தா ஆசிரமத்திலேயே இருக்கப்போவதாகக் கோப்பாய் எம். பி.யிடமும் இவர்கள் தெரிவித்துள்ளார்கள். (உ)

# சிகரெட்புகையிலை உற்பத்தி விவசாயிகளுக்கு யோசனை

(அரியாலை)

''சிகரெட்புகையிலை உற்பத்தியில் வடபகுதி கமக்காரர்கள் மீண்டும் தீவிர கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளனர். முன்னரிலும் பார்க்க தற்போது சிகரெட் புகையிலை விலையையும் கூட்டியிருக்கிறுர்கள். இதர பயிர்களிலும் பார்க்க புகையிலையின் விலை வர வரக் கூடிக்கொண்டு போகிறது. மற்றப் பயிர்களின் விலை காலத்துக்குக் காலம் கூடியும் குறைந்தும் போகிறது. ஆனுல் சிகரெட்'' புகையிலையின் விலை கூடிக்கொண்டு போகுமேயல்லாமல் எந்தநாளும் குறையாது என்று சிகரெட்புகையிலைக் கம்பனிப் பிரதிநிதி திரு. ஏ. ஜி. எஸ் பாலச்சந்திரன் கைதடி சிகரட் புகையிலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க விசேட பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

திரு இ வேலாயுதர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பெருந்தொகையான கமக்காரர்கள் சமுமளித்திருந்தார்கள்.

கமத்தொழில் போதனுசிரியர் திரு. எஸ்.சுப்பிரமணியம் பேசுகையில் கமக்காரர்கள் குறுகிய காலப் பயிர்களை மாறி மாறிச் செய்கை பண்ண வேண்டுமெனவும், கலப்புப் பயிர்களை உற்பத்தி செய்தால் அதிக நன்மை உண்டாகும் எனவும் கூறினுர். (உ)

# குருகுலத்துக்கு நிதி உதவி; அமைச்சர் உறுதி

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஆதரவில் இயங்கி வரும் சிவானந்த குருகுலப் பாடசாலைக்குத் தகுந்த கட்டிடம் அமைக்க அரசாங்கத்திடம் இருந்து இயன்றளவு நிதி பெற்றுத் தருவதாகக் கலாச்சார அமைச்சர் திரு. ஈ. எல்.பி.ஹுருள்ளே வாக்குறுதி அளித்துள்ளார்.

இவ்விஷயம் தொடர்பாகத் தம்மைச் சந்தித்த சிவானந்த குருகுலப் பரிபாலன சபைப் பிரதிநிதிகளிடம் அமைச்சர் இவ்வாக்குறுதியை அளித்தார்.

இப்பேட்டியின் போது அமைச்சருடன் காரியதரிசி, சிரேஷ்ட உப காரியதரிசி, கலாச்சார அத்தியட்சகர் ஆகியோரும் குருகுலப் பரிபாலன சபை சார்பில் சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக்குருக்கள், பிரமஸ்ரீ கி. லக்ஷ்மண ஐயர், குருகுல உப தலைவர் பிரமஸ்ரீ ப. சுப்ரமண்ய ஐயர், காரியதரிசி பிரம்ஸ்ரீ ப. வித்தியானந்த சர்மா ஆகியோரும் இடம் பெற்றிருந்தனர். [உ]

# அமைச்சரிடம் எம். பி. புகார்

(வவனியா)

ப. நோ. கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த நகரசபையில் அமைந்த கடைகள் இப்போது தனியாருக்குக் கொடுக்கப்பட்டுள்ளதாம்.

இவ்வித போக்கினுல் கூட்டுறவு இயக்கம் வளர முடியுமா என்று வவனியா எம். பி திரு. ரி. சிவசிதம்பரம் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. ஹேரத்தைக் கடித மூலம் கேட்டுள்ளார்.

வவனியா நகரசபையின் புதிய சந்தைக் கட்டடத்தில் வவனியா தமிழ்ப் பகுதி ப. நோ. கூ. சங்கம் இரு கடைகளை வாடகைக்குப் பெற்று அதில் தனித்தனியாக கிராமிய வங்கியையும், இரும்பு இரசாயனப் பொருட்கள் விற்பனையையும் மேற்கொண்டிருந்தது.

கடந்த ஆகஸ்ட் வன்முறைகளின்போது மூடப்பட்டபின் இரு நிலையங்களும் இட நெருக்கடியான காரியாலயத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாம்.

குத்தகைக்கு மேற்படி சங்கத்தால் எடுக்கப்பட்ட அறைகள் இரண்டும் இப்போது தனியாருக்குக் கொடுக்கப்பட்டுள்ளனவாம்.

இதுகுறித்து திரு. சிவசிதம்பரம் அமைச்சரிடம் முறையிட்டுள்ளார். (உ)

## துணிவே...

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

யும் ஏற்படுத்தியவர் திரு தமிழ்வாணன்.

நூலாசிரியர்களும், எழுத்தாளர்களும் பலநூற்றுக்கணக்கில் தமிழ்நாட்டில் இருக்கின்ற போதிலும் அவர்களில் தனித்துவம் பெற்றவராகத் திகழ்ந்தவர் அவர்.

எழுத்தாளர்களில் தனக்கென்று சக்திமிக்க ஒரு விசிறிகள் கூட்டத்தையே வைத்திருந்த தனிப் பெருமைக்கு உரிவவர் தமிழ்வாணன்.

அவரது அற்புதமான எழுத்தாற்றலில் சிந்தை பறிகொடுத்திருந்த பல்லாயிரக் கணக்கான வாசகர்களுக்கு அவர் எழுதிய பல நூல்களும் காலமெல்லாம் பயன்தரும் அரும் பொக்கிஷங்களாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

திரு தமிழ்வாணனை ஒரு கணம் நினைத்துப் பார்த்தால் கறுப்புக்கண்ணுடி அணிந்தஅவரதுமலர்ந்தமுகமே கண்ணில் தெரிந்து கருத்தில் நிறைகிறது.

அச்சுவேலி கொள்ளை வழக்கு:

# பிணையில் விடுவதுபற்றி 16-ல் விசாரணை

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கொள்ளை வழக்கில் எதிரிகளைப் பிணையில் விடுவது பற்றிய விசாரணை இம்மாதம் 16ந் திகதி நடைபெறும்.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் ஜனப் எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். பி தம்பிரத்தினம் சட்டத்தரணி சண்முகசுந்தரம் சட்டத்தரணி கனகமகேஸ்வரன் ஆகியோர் ஆஜரானுர்கள். 2ம் 3ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி எஸ். யோகநாதன், சட்டத்தரணி ஸ்ரீபவன், சட்டத்தரணி வரதராசா ஆகியோர் ஆஜரானுர்கள். அரசதரப்பில் சட்டத்தரணி பி. சிவலோகநாதன் வழக்கை நடத்தினுர்.

கடந்த தவணையின்போது இரு பக்கத்தினரையும் சத்தியக்கடதாசி இணைக்கும்படி நீதிபதி பணித்ததைத் தொடர்ந்து எதிரிகள் மூவரும் தனித்தனி தாங்கள் பிணையில் விடப்படவேண்டிய காரணங்களைத் தங்கள் சட்டத்தரணிகள் மூலம் சத்தியக்கடதாசிகளைச் சமர்ப்பித்தனர். எதிரிகளைப் பிணையில் விடக்கூடாதென்பதற்குரிய காரணங்களை குறிப்பிட்டு அரச சட்டத்தரணி பி. சிவலோகநாதன் சத்தியக்கடதாசி அணைத்தார்.

நீதிபதி இது தொடர்பான விசாரணையை இம்மாதம் 16ந் தேதிக்கு ஒத்திவைத்தார். [க]

# இலங்கை சிங்களப்படங்கள்

## இந்தியாவிலும் திரையிடப்படும்

### திரைப்படக் கூட்டுத்தாபன புதிய திட்டம் அமுலாகும்

(கொழும்பு)

இலங்கையில் தயாராகும் சிங்களத் திரைப்படங்கள் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படவிருக்கின்றன.

இதற்கான புதிய திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவிருப்பதாக இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனத் தலைவர் தெரிவித்தார்.

இந்த அடிப்படையில் இலங்கையில் தயாரான 12 சிங்களத் திரைப்படங்கள் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படவிருக்கின்றன.

அத்துடன் ஜனவரி மாதம் சென்னையில் நடைபெறவிருக்கும் சர்வதேசத் திரைப்பட விழாவில் இலங்கையும் கலந்துகொள்ளவிருக்கிறது.

இதுவரை இந்தியாவில் இருந்து இங்கு திரைப்படங்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

ஆனுல் இலங்கைத் திரைப்படங்கள் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யமுயற்சிமேற்கொள்ளப்படவில்லை.

இப்போது இலங்கைத் திரைப்படங்கள் இந்தியாவுக்கு விற்பனை செய்யும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்று இலங்கைத் திரைப்படக்கூட்டுத்தாபனத் தலைவர் மேலும் தெரிவித்தார். (உ)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
**துணிவே துணை**

லிடோ எம். ஜி. ஆர். — லதா நடித்த
(யாழ். நகர்) போன்; 7693
**நீதிக்கு தலைவணங்கு**

கடைசி வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
வின்ஸர் சிவாஜி, மஞ்சுளா, தேவிகா,
(யாழ்ப்பாணம்) கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
**சத்யம்**
(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
கடைசி வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த் நடித்த
**அன்னக்கிளி**

றியோ (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
மாலாசின்ஹ - சன்ஜே
**தில்லகி**
(ஹிந்தி)

பூலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர்-லதா
**உழைக்கும் கரங்கள்**

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர்.
**உலகம் சுற்றும் வாலிபன்**
(கலர்)

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-4[illegible]0-00
சனி, ஞாயிறு பி. ப. 2-45
சந்திரபாபு
**கவலை இல்லாத மனிதன்**


## உதைபந்தாட்டப் போட்டிகள்

(அரியாலை)

யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரி உதைப்பந்தாட்டக் கோஷ்டிகளுக்கும் யாழ்மத்திய கல்லூரி உதைப்பந்தாட்டக் கோஷ்டிகளுக்கு மிடையில் பரி. யோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் முதலாம் பிரிவுப்போட்டியில் 3-0 கோல்களாலும் மூன்றும் பிரிவுப்போட்டியில் 1 0 கோல்லாலும் வெற்றியீட்டிய பரி.யோவான் கல்லூரிக் கோஷ்டி இரண்டாம் பிரிவுக்கான போட்டியில் 1-1 கோலால் சமஞகிக் கொண்டது. பெருமழை பெய்து கொண்டிருந்த போதிலும் போட்டி தொடர்ந்து நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் புனிதசம்பத்திரியார் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரிக்கு மிடையில் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்ற போது சம்பத்திரிசியார் கல்லூரி 1-பிரிவில் 6-2 கோல்களாலும் 2 ம்பிரிவில் 3-0 கோல்களாலும் 3-ம் பிரிவில் 6-0 கோல்களாலும் மத்திய கல்லூரியை தோற்கடித்து வெற்றி பெற்றது.


**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**

சாந்தி (யாழ். நகர்)
போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஏ. பி. நாகராஜனின்
**அகத்தியர்**
புராண வண்ணச் சித்திரம் — புத்தம்புதிய பிரதி

ராஜா- யாழ்நகர்
ஐந்தாவது வெற்றி வாரம்!
தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்
அற்புதப் படைப்பு!
ஜெமினி, ஜெயசித்திரா கே. ஆர். விஜயா
நடித்த
**தசாவதாரம்**
(கலர்)
(கண்ணபிரானின் பத்து அவதாரங்கள்)
(பாடசாலை மாணவர்கள் முன்கூட்டியே ஆசனங்களைப் பதிவுசெய்துகொள்ளலாம்)



Regal (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-30 p. m only
**"HOLIDAY ON THE BUSES"**
Full Comedy color

கடைசி வாரம்
ராணி (யாழ்ப்பாணம்) ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
**பெண் தெய்வம்**

**மனோஹரா**
(யாழ். நகர்)
காலை 6 மணிக்காட்சியுடன் ஆரம்பம்



★ நடிகர்திலகம் சிவாஜிகணேசன்
★ நடிப்புச் செல்வம் ஜெமினிகணேஷ்
★ லக்ஷ்மி ★ நிர்மலா
★ சுந்தரராஜன் ★ ராமதாஸ்
★ பாலாஜி ★ மனோகர்
★ மனோரமா ★ நாகேஷ்
★ சுப்பையா

நடிக்கும்
சுஜாதாவின்......
**உனக்காக நான்**
(ஈஸ்ட்மன் கலர்) டைரக்ஷன் சி. வி. ராஜேந்திரன்

சிறந்த கதை! பண்பட்ட நடிப்பு! இனிமையான பாடல்கள்!
சிந்தனைக்குகந்த கருத்துக்கள்!

சிவாஜி கணேசனும், ஜெமினி கணேசனும் இணைந்து நடித்து ரசிகர்களின் அமோக ஆதரவைப் பெற்று இந்தியாவில் வெற்றிமுழக்கமிட்ட படம்

**மணிவாக்கு**

அகத்திற் தூய்மையுடையோன்; புறத்தில் அசுத்தமாயிருக்கமாட்டான்.
—காந்திமகான்


# ஈழநாடு
The Eelanaadu


## முற்போக்கு நடவடிக்கை

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் இந்திய வம்சாவளியினரான தோட்டத்தொழிலாளர்களும் வாக்களிக்கும் உரிமையைப் பெறவிருக்கிறார்கள்.

சுதந்திரம் கிடைத்ததின் பின்னர் பொதுசன வாக்கெடுப்பின் மூலம் பதவிக்கு வந்துள்ள அரசுகள் எதுவும் இதுவரை நினைத்துக் கூடப் பார்க்காத ஒரு முற்போக்கு நடவடிக்கை இதுவாகும்.

பொதுத்தேர்தல்களில் பங்கு பற்றும் சர்வஜன வாக்குரிமை இருந்தும்கூட இம்மக்களில் பெரும்பாலானவர்கள் இதுவரை உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படவில்லை.

தோட்டங்களில் வாழும் சிங்களப் பிரஜைகள் தாங்கள் வாழும் பகுதிகளில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமை பெற்றிருந்தபோதிலும் அதே தோட்டங்களில் வாழும் இந்திய வம்சாவளியினருக்கு இந்த உரிமை வழங்கப்படவில்லை.

இதனால் அம்மக்கள் கிராமப்பகுதிகளிலும்நகரப்பகுதிகளிலும் வாழும் மக்களுடன் சேர்ந்து வாழாமல் ஒதுங்கியும், ஒதுக்கப்பட்டும் வாழும் நிலைமை இருந்து வந்தது.

புதிய ஏற்பாடு நடைமுறைக்கு வரும்போது இவர்கள் இந்த நாட்டின் நிர்வாகத்தில் தங்களுக்கும் பங்குண்டு என்று உணரவும், ஏனைய மக்களைப் போல் நாட்டின் அபிவிருத்தியில் ஊக்கத்துடன் பங்கேற்கவும் வசதியேற்படும்.

கடின உழைப்பையே தம் மூலதனமாகக் கொண்டுள்ள இவர்களை வெறும் கால்நடைகளைப்போலதேவைக்கு மாத்திரம் பயன்படுத்தி வந்த 'காலனித்துவ ஆட்சியாளர்களின் போக்கையே இதுவரை காலமும் பதவியிலிருந்துவந்த அரசாங்கங்கள் பின்பற்றி வந்துள்ளன.

வர்க்கபேதமற்ற சோஷலிஸ சமுதாயமொன்றை உருவாக்கப் போவதாகப் பிரசாரம் செய்துவந்த முன்னைய அரசும் கூட இது பற்றி சிந்திக்கவில்லை.

திரு. ஜே. ஆர். தலைமையில் ஐக்கிய தேசியக்கட்சி பதவிக்கு வந்ததின் பின்னர் எடுத்துள்ள பாராட்டுக்குரிய பல நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று எனில் மிகையாகாது.

தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பல்வேறு அபிவிருத்தி அம்சங்களுக்கும் இந்த ஏற்பாடு முன்னோடியாக அமையும் என்று கருதலாம்.

இதற்காக இந்த அரசை இந்திய வம்சாவளியினர் மாத்திரமின்றி இந்த நாட்டில் உண்மை ஜனநாயகம் நிலவவேண்டும் எனக் கருதும் சகல மக்களும் பாராட்டுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

# உள்ளூராட்சித் தேர்தலில் மேயரை தெரிய புதியமுறை

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் அதிக வாக்கைப் பெறும் கட்சியின் அல்லது சுயேச்சைக்குழுவின் அபேட்சகர் பட்டியலில் உள்ள முதலாவது பெயருக்குரியவர் முதல்வராகவும் இரண்டாவது பெயருக்குரியவர் உதவி முதல்வராகவும் தேர்ந்தெடுக்கப்படுவர். இத்திருத்தம் உள்ளூராட்சி மன்ற தேர்தல் சட்ட திருத்த மசோதாவில் இடம்பெற்றுள்ளது.

நடப்பு தேசியப்பேரவைக் கூட்டத் தொடரில் தாக்கலாக இருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத் திருத்த மசோதாவின் முக்கிய திருத்த விபரங்கள் வருமாறு:

### குழுக்கள் மட்டுமே

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளே கட்சி ரீதியாக அபேட்சகர்களை நிறுத்த முடியும். சுயேச்சை வேட்பாளர்கள் குழுக்களாகச் சேர்ந்து போட்டியிடலாம். ஒன்றுக்கு மேற்பட்ட சுயேச்சைக் குழுக்களும் அனுமதிக்கப்படும். ஆனால் அளிக்கப்படும் வாக்குகள் கட்சிகளுக்கு அல்லது சுயேச்சைக் குழுக்களுக்கு அளிக்கப்பட்டதாகக் கருதப்படுமேதவிரஎந்த ஒரு தனி நபருக்கும் அளிக்கப்பட்டதாகக் கருத முடியாது.

### மேயர் தெரிவு

அதிக வாக்குகளைப் பெறும் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் முதலாவது பெயருக்குரியவர் முதல்வராகவும் இரண்டாவது பெயருக்குரியவர் உதவி முதல்வராகவும் தெரிவு செய்யப்படுவர்.

முதல்வர் பதவிக்கு எவ்வகையிலும் வெற்றிடம் ஏற்படும் பட்சத்தில் உதவி முதல்வர் முதல்வராகத் தெரிவு செல்யப்படுவார். நியமனப்பட்டியலில் மூன்றுவதாக உள்ள பெயருக்குரியவர் உதவி முதல்வராகத் தெரிவு செய்யப்படுவார்.

### அங்கத்தவர் தெரிவு

அங்கத்தவர்கள் ஒவ்வொரு கட்சிக்கும் அல்லது சுயேச்சை குழுவுக்கும் அளிக்கப்பட்ட வாக்கு விகிதாசாரத்திற்கு ஏற்பத் தெரிவு செய்யப்படுவர்.

ஒரு கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு வாக்குகள் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 5 விதத்திலும் குறைவாகக் கிடைக்குமாயின் அக்கட்சி அல்லது குழுவின் வாக்குகள் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் இருந்து கழிக்கப்படும்.

### கட்டுக்காசு

ஒரு சுயேச்சைக்குழு அளிக்கப்படும் வாக்குகளில் எட்டிலொரு பகுதியையாவது பெறுவிட்டால் கட்டுக்காசு இழந்ததாக கருதப்படும்.

### அங்கத்தவர் காலியிடம்

ஓர் அங்கத்தவரின் இடம் காலியாக வருமிடத்து அதிக வாக்குகளைப் பெற்ற கட்சியின் பட்டியலில் மீதியாயிருக்கும் பெயர்களில் முன்னணியில் இருப்பவர் அங்கத்தவராகத் தெரிவு செய்யப்படுவார். இவருக்கு ஒரு அங்கத்தவருக்கு உரிய சகல உரிமைகளும் இருக்கும்.

ஒரு கட்சியின் அபேட்சகர் பட்டியலில் உள்ள அனைவரும் வெற்றியீட்டி இருக்கும் பட்சத்தில் அங்கத்தவர்காலிஇடம் வருமாயின் உள்ளூராட்சி அமைச்சர் அந்தக் கட்சியின் செயலாளரிடம் அங்கத்தவருக்குஉரிய பெயர் ஒன்றைச் சிபார்சு செய்யும்படி கோருவார். (கி-அ)

## வைத்திய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வணியிலிருந்து பெறப்பட்ட 5,014 பவுண் 55 பென்ஸிலிருந்து திரு பண்டாரநாயக்கா தமதுமனைவியும்அந்தரங்கச் செயலாளருமான திருமதி லட்சுமிக்கு மூக்குக் கண்ணாடி வாங்கினார் என்றும் தமக்கு கண்ணில் சிகிச்சை செய்துகொண்டார் என்றும் திரு மெல் தெரிவித்தார்.

1,28,412 ரூபா 88 சதம் பெறுமதியான இத்தொகையைப் பெற நாணயக் கட்டுப்பாட்டாளரின் அனுமதி மறுக்கப்பட்ட போதிலும் திரு. பண்டாரநாயக்கா அப்பணத்தைப் பெற்ற பின்னர் முன்னாள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் பணிப்பின் பேரில் இந்த அனுமதி வழங்கப்பட்டது என்றும் திரு. மெல் கூறினார்.

### பிரேமதாசா குறுக்கீடு...

அப்போது திரு. ஆர். பிரேமதாசா குறுக்கிட்டு, திரு.பீலிக்ஸின் செயல் அந்நிய செலாவணி மோசடி என்று கூற முடியாதா? என்று கேட்ட போது தாம் அவ்வாறு கூறவில்லை என்றும் 'அதிகாரதுஷ்பிரயோகம்' என அதைக்கூற விரும்புவதாகவும் திரு மெல் கூறினார்.

அரசுப் பணத்தை அமைச்சர்கள் தமது மனைவிமாரின் செலவுகளுக்கும் பயன்படுத்தலாமா? என ஊவாபரணகம உறுப்பினர் திரு. ஆர். எம். கருணரத்ன நிதிஅமைச்சரிடம் கேட்டபோது இனிமேல் அவ்வாறு நடைபெறாது என்றும் அவர் கூறினார்.

### தீர்வையின்றி கார் இறக்குமதி

திரு. பீலிக்ஸ் பதவியிலிருந்த போது தமது உறவினர்கள் நண்பர்களுக்கு 5 முதல் 10 வரையிலான கார்களை சுங்கத் தீர்வையின்றி இறக்க அனுமதி வழங்கி இருந்தார் என்றும் திரு. மெல் கூறினார். (ம-இ)

## போலி துப்பாக்கி முனையில் கொள்ளைமுயற்சி தோல்வி
### கொள்ளையர் இருவரும் காவலில்

(யாழ்ப்பாணம்)

தனங்கிழப்பு கூட்டுறவுச்சங்கக்கடையில் சுடமுடியாத துப்பாக்கியைகாட்டிகொள்ளையடிக்கச் சென்ற இருவரில் ஒருவரை கடைமுகாமையாளரும் இன்னும் ஒருவரை பொலிசாரும் பிடித்துள்ளனர்.

சங்கத்தானையைச்சேர்ந்த வி. விமலநாதன் சம்பவதினத்தன்று முகாமையாளராலும், கே. பாலசுப்பிரமணியம் நேற்று பொலிசாராலும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவதினம் கொள்ளையர்கள் இருசைக்கிள்களில் முகத்தை மறைத்தபடி தனங்கிளப்பு கூட்டுறவுச் சங்கக் கடைக்குச் சென்று அங்கு தனியாக இருந்த திரு. கணபதிப்பிள்ளை கனகரத்தினம் என்ற முகாமையாளரைகிறிஸ் கத்தியால் குத்த முற்பட்டனராம்.

முகாமையாளர் மிகவும் சாதுர்யமாக தன்னை நோக்கி வந்த கிறிஸ்கத்தியைப் பிடித்துக்கொண்டு கொள்ளையரில் ஒருவரை மடக்கிப் பிடித்தாராம். மற்றையவர் கையிலிருந்த போலித் துப்பாக்கியைப் போட்டுவிட்டு சைக்கிளில் ஓடி மறைந்தாராம்.

முகாமையாளர் எதுவித விதகாயமுமின்றி தம்மை க்காப்பாற்றிக்கொண்டு விமலநாதனை சாவகச்சேரிப் பொலிசில் ஒப்படைத்ததைத் தொடர்ந்து சாவகச்சேரிப் பொலிசார் மற்றையக் கொள்ளையரான பாலசுப்பிரமணியத்தைக் கைது செய்தனர்.

முகாமையாளரின் துணிவுக்குப் பொலிஸ் அதிபர் திரு. ரன்முத்துகல பாராட்டுத் தெரிவித்துள்ளார். (கெ-இ)

## திருட்டு வழக்கு ஒத்திவைப்பு

(பண்டத்தரிப்பு)

நள்ளிரவில் வீட்டில் தனித்திருந்த இளம்பெண்ணின் தாலிக்கொடியைப் பறித்துக்கொண்டு ஓடியதாக குற்றம் சாட்டப்பட்டுதொடரப்பட்ட வழக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதவான் எம். டி.யேசுரத்தினம் மறுவிசாரணையை அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 14ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

சுன்னாகத்தைச்சேர்ந்த கண்மணி என்னும் இளம்பெண்ணின் தாலிக்கொடியை அதே இடத்தைச் சேர்ந்த தியாகராசா என்பவர் நள்ளிரவு வேளையில் பறித்துக்கொண்டு ஓடியதாகவும் பின்பு அயலவர்களால் பிரஸ்தாபநபர் துரத்திப் பிடிக்கப்பட்டு தாலிக்கொடி மீட்கப்பட்டதாகவும் சுன்னாகம் பொலிசார் இவ்வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர். [இ]

## தமிழ்ப்பகுதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்ன?' என்று திரு. அமிர்தலிங்கம் கேட்ட போது, 'நீங்கள் தனிநாடு கேட்கும்போது எங்களால் அப்படி எவ்வாறு கூறமுடியும் என்று திரு. உல்ஸ்ரன் கேட்டாராம்.

சுவிடனும் நோர்வேயும் முன்னர் ஒரே நாடாகவே இருந்ததாகவும், காலப் போக்கிலேயே அவை தனிநாடுகளாகின என்றும் திரு. அமிர்தலிங்கம் திரு. உல்ஸ்ரனிடம் கூறினாராம்.

### இந்திய தூதுவர் சந்திப்பார்

திரு. அமிர்தலிங்கத்தை எதிர்வரும் திங்கட்கிழமை இந்தியத் தூதுவர் திரு. குரியச்சான்டின் சந்திக்க உள்ளார். (ம-இ)

[யாழ்ப்பாணம்]

மயிலணிக் கந்தசுவாமி கோயிலில் கந்தபுராணப் படிப்பு நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஆரம்பமானது. திரு. வை. நல்லையாதினமும் விரிவுரை நிகழ்த்துவார். [அ]

## 'தங்கச்சியம் மா' அறிமுக விழா

[யாழப்பாணம்[

'நந்தியின் தங்கச்சியம்மா அறிமுகவிழா, இன்று மாலை யாழ். 'மைற் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

பேராசிரியர் யாழ் வளாகத் தலைவர் சு. வித்தியானந்தன் தலைமையில் நடை பெறும் இவ் விழாவில், 'சொக்கன்' வெளியிட்டுரை நிகழ்த்துவார்.

கலாநிதி ஆ சண்முகதாஸ், திருமதி என் வல்லிபுரம், திரு. தா. சிவபாதசுந்தரம், திரு. டொமினிக் ஜீவா ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவார்கள்.

கலாநிதி யோகுபசுபதி முதற்பிரதியைப் பெற்றுக் கொள்வார். [க-அ[

## கத்திவெட்டு: ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கரையூரில் நேற்று நடந்த தாக்குதல் சம்பவமொன்றில் பொன்னுக்குட்டி பிரான்சிஸ் என்பவர், பலத்த வெட்டுக் காயத்திற்குள்ளானார். இவர் உடனடியாக யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாகச் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து பொலிசார் சந்தேக நபரான யேசுராசாவைக் கைதுசெய்துள்ளனர்.

குருநகர்ப் பொலிசார் தொடர்ந்து இச்சம்பவம்பற்றி விசாரணை செய்துவருகின்றனர். (க-அ

## இன்று அடிக்கல் நாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சங்கத்தானை வைரவசுவர்மிகந்தசுவாமி கோவில் திருப்பணிச்சபையின் ஆதரவில் வசந்தமண்டப அடிக்கல் நாட்டுவிழா தொழிலதிபர் திரு. க. கனகராசா தலைமையில் இன்று மாலை நடைபெறும். (க. அ)

## அகதிகளுக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அகதிகளுக்குக் காணி வழங்குவதற்கான ஏற்பாட்டை யாழ். அரசாங்க அதிபர் திரு. டபிள்யு ஏ. எல், வியஜபால செய்துவருகிறார்.

முகாம்களில் உள்ள அகதிகளில் ஒரு பகுதியினர் ஏற்கனவே தனியார் தோட்டங்களிலும் காணிகளிலும் குடியேறியுள்ளனர்.

தற்போது யாழ். மாவட்டத்திலுள்ள அகதிகள் முகாம்களில் சுமார் 2,500 அகதிகள் இருப்பதாக சமூகசேவைத் திணைக்கள அதிபர் திரு. க. கங்காதரன் தெரிவித்தார்.

இம்மாதம் 15ந் தேதிக்குமுன் அகதிகளுக்கு காணிகளைவழங்கி முகாம்களை மூடிவிடும்படி மேலிடம் அறிவித்துள்ளதாகத் தெரியவருகிறது. ஆனால் காலநிலை காரணமாக அகதிகளைக் குடியேற்றும் வேலை மேலும் காலதாமதமாகலாமெனக் கூறப்படுகிறது. (கஅ)

## 'பெரும் சொத்து'

[வேலணை]

''மக்களின் பெரும் சொத்துக்கள் அவர் தம் சூழலிலேயுள்ள கல்விக்கூடங்களே யாகும் இக்கல்விக் கூடங்களைப் பேணிப்பாதுகாப்பது அவர்களின் பெரும் பொறுப்பாகும் பாடசாலைகளின் அவ்அப் போதைய தேவைகளை அறிந்து அவற்றை நிறைவேற்ற ஆவன செய்வதும் அவ்வூர் மக்களின் தலையாய கடமையாகும்'' என்று வேலணை மத்தியமகா வித்தியாலய அதிபர் திரு. செ. குணபாலசிங்கம் வித்தியாலய மைதானத்தில் நிகழ்ந்த இல்ல விளையாட்டுப் போட்டி முடிவில் பேசுகையில் கூறினார். வள்ளுவர் இல்லம் முதலிடம் பெற்றது. [உ]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 58-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelanadu Telephone 389, Registered as News paper in Sri Lanka)